**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.83/2020</u>**

**நாள்– 23.06.2026**

**பி.வா.சா. 1 – திரு. சங்கர், குமாரபாளையம் சார்பதிவாளர்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1) சாட்சியமளிக்கும் முன்பு தாவா சொத்தினை பார்வையிட்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் எனது தரப்பில் என்ன எதிர்வழக்குரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். தாவாவின் சர்வே எண்.183/1 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.183/1 , சர்வே எண்.183/6J1 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் வாதி தாவா சர்வே எண் பொறுத்து திருத்தம் உள்ளதால் பிழை திருத்தல் பத்திரம் வேண்டி தாவா தாக்கல் செய்துள்ளார். வாதி 1983ல் தாவா சொத்தினை கிரையம் பெறும் முன்பு அன்றைய வழிகாட்டு மதிப்பின் படி தான் முத்திரைத் தீர்வினை கட்டியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.183/1 என்பது தவறு என்றும் அதனை சர்வே எண்.183/6J1 என்று மாற்றம் செய்வதில் அரசுக்கு எந்த வருவாய் இழப்பும் இல்லை என்றால் சரியல்ல, ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் மதிப்பீடு மாற்றம் இருக்கும்.

2) வா.சா.ஆ.1ன் படி வாதி 1983ம் வருடம் கிரையம் பெற்ற தேதியில் இருந்து தற்போது வரை செக்குபந்தியில் எந்த மாற்றமும் இல்லை என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவின் பேரில் வாதி அரசு வழிகாட்டி மதிப்பின் பபடி சர்வே எண்.183/6J1ற்கான முத்திரை மதிப்பீட்டினை செலுத்திவிட்டால் அரசுக்கு எந்த இழப்பீடும் இருக்காது என்றால் சரிதான். நான் எனது பிரமாணப் பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல் 35 வருடங்களுக்கு பின்னிட்டு இவ்வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளதால் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறுவது தவறு என்றாலும், வாதிக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து 3 வருட காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**